# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :29 January 2026
கோட்டை:8 வாயில்:29 ஜனவரி 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.



நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# நுண்கலை



## ஸ்ரீ நீலகண்ட சிவனின் வாழ்க்கை வரலாறும் இசைத் தொண்டும்

## *The life history of Sri Neelakanta Sivan and his service to music*

**ர.ராஜா,** முனைவர் பட்ட ஆய்வாளர், இசைத்துறை , தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**முனைவர் செ.கற்பகம்,** நெறியாளர் மற்றும் இணைப் பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***R Raja,*** *Doctoral Research Scholar, Department Of Music, Tamil University Thanjavur*

***Dr. S. Karpagam*** *,Research Guide & Associate Professor, Tamil University*

### *Abstract*

*A composer of musical forms such as gitams, kirtanas, and padams is referred to in the field of music as a vaggeyakara (composer). Such composers are classified as "uttama vaggeyakāra" and "adhama vaggeyakāra." An uttama vaggeyakāra is one who possesses knowledge of both music (sangita) and literature (sahitya), whereas an adhama vaggeyakara is one who is primarily a poet. Sri Neelakanta Sivan is a distinguished and scholarly vaggeyakara who emerged from Tamil Nadu. He stands apart from other music scholars as a great Saiva saint and ardent devotee of Lord Siva. He rendered Tamil literary compositions in a proper manner that could be effectively embraced and utilized by the world of music. His kirtanas are marked by profound devotion and spiritual intensity, expressed through gentle, melodious, and aesthetically pleasing words. They possess the power to captivate the hearts of listeners instantly. He has composed excellent musical pieces in several rare ragas. He is also revered as a divine poet (arul kavi). This study presents an overview of the life history and musical contributions of Sri Neelakanta Sivan.*

***Keywords****: Keerthanai, Ragam, Thalam, Apoorva Raagangal , Thanjavur*

### ஆய்வுச் சுருக்கம்

கீதங்கள், கீர்த்தனைகள், பதங்கள் போன்றவற்றை இயற்றுபவர் இசைத் துறையில் வாக்கேயக்காரர் என அழைக்கப்படுவார் இவர்கள் 'உத்தம வாக்கேயக்காரர்', 'அதம வாக்கேயக்காரர்' என வகைப்படுத்தப்படுவர். உத்தம வாக்கேயக்காரர் என்பவர், சங்கீதம்

மற்றும் சாகித்யம் தெரிந்தவர் அதம வாக்கேயக்காரர் என்பவர், கவிஞர் ஆவார் .ஸ்ரீ நீலகண்ட சிவன் அவர்கள் தமிழகத்தில் தோன்றிய புலமைமிக்க வாக்கேயக்காரர் குறிப்பிடத்தக்கவர். ஸ்ரீ நீலகண்டசிவன் அவர்கள் இசை அறிஞர்களிடமிருந்து வேறுபட்டவர். இவர் ஒரு பெரிய சிவபக்த மஹானாக இருந்த பெரியவர். இனிய தமிழ் சாஹித்யங்களை இசை உலகம் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அமைத்தவர். இவரது கீர்த்தனைகள் வைராக்கியமும் பக்தியும் ததும்பும் சொற்கள் லலிதமாகவும் இனிமையாகவும் இருக்கும். கேட்ட மாத்திரத்தில் எல்லோருடைய இதயத்தையும் வசப்படுத்தும் திறமுள்ளவை. பல அபூர்வராகங்களில் அருமையான உருப்படிகளை அமைத்துள்ளார். இவர் ஒரு அருட்கவி ஆவார். தாசர் அவர்களின் வாழ்க்கைவரலாறு,இசைத் தொண்டுகள் பற்றி இங்கு காண்போம்.

**திறவுச் சொற்கள் :** கீர்த்தனை,ராகம், தாளம், அபூர்வ ராகங்கள்

**முன்னுரை**

இறைவழிபாட்டு நெறிகளுள் இசை மூலம் இறைவனை வழிபடும் முறை மிகவும் தொன்மையான நெறியாகும். தமிழிசையால் இறைவனைப் போற்றிப் புகழும் திருநெறியை நாயன்மார்களும், ஆழ்வார்களும் சிறப்புடன் கையாண்டனர். இவர்களைத் தொடர்ந்து அருணகிரிநாதரும், தமிழிசை மூவர்களும், சங்கீத மும்மூர்த்திகளும் இசை வழிபாடு செய்தனர்இந்தத் திருநெறியை 19 ஆம் நூற்றாண்டில் இசையின் மூலம் பரப்பியவராக நீலகண்ட சிவன் விளங்குகிறார்.

**பிறப்பும் இளமையும்**

ஸ்ரீ நீலகண்ட சிவன் அவர்கள் நாகர்கோவிலை அடுத்த வடிவீட்சரம் என்ற தலத்தில் 1839 ஆம் ஆண்டு அவதரித்தார். இவரது பெற்றோர் திரு.சுப்ரமனிய அய்யர் திருமதி.அழகு அம்மாள். இவரது இயற்பெயர் சுப்ரமணியன். 1839 முதல் 1900 வரை வாழ்ந்த ஸ்ரீ நீல கண்ட சிவன் இறைவன் திருநீலகண்டர் மீது தான் கொண்டிருந்த தணியாத ஈடுபாட்டின் காரணமாக பிற்காலத்தில் அன்னாரது இயற்பெயரான சுப்ரமணியன் என்பது மறைந்து ஸ்ரீ நீலகண்டசிவன் என்று அழைக்கப்பட்டார். ஆயினும் சிவ பெருமானின் பரம பக்தர் ஆன தம்மை ஸ்ரீ நீல கண்ட தாசர் என்று அழைக்கப்படுவதயே பெரிதும் விரும்பினார்.

குழந்தைப் பருவம் முதலே ஈஸ்வர பக்தியில் ஈடுபட்டு இருந்தார். தனது ஐந்து வயதிலேயே பஜனை நடக்கும் இடங்களுக்குச் சென்று அதில் பங்கு கொள்வார். தானே சில சிறுவர்களைக் கூட்டிக்கொண்டு பஜனை நடத்துவார். பழைய பஜனைப் பாட்டுக்களைத் தவிர மெட்டுக்கள் தெரியாத பல பாட்டுக்களுக்குத் தானே மெட்டுக்கள் அமைத்துப் பாடுவாராம். அப்படி பஜனை செய்யும் போது தன்னையே மறந்து பக்தியில் பரவசம் அடைவார்.

**திருத்தல யாத்திரை**

தமது வாழ்நாளின் இறுதி கட்டங்களில் வாழ்வின் உண்மைகளைக் கண்டறியும் அவாவின் காரணமாக நீண்டதூர திருத்தல யாத்திரைகளை மேற்கொண்டார். திருக்குற்றாலம், பாபவிநாசம், சங்கரநாயினார் கோவில், கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி, சிதம்பரம், திருச்சி, சென்னை மயிலாப்பூர், கருங்குளம்,குலசேகரம்,வைக்கம், ஏற்றுமானூர், ஆலப்புழை, மாவேலிக்கரை இன்னும் **108** திருத்தலங்களையும் தரிசனம் செய்து இறைவனையும், இறைவியையும் மிகத் துதித்துப் பாடியுள்ளார்.[1]தமது 14வது வயதில் லக்ஷ்மி அம்மாளைத் திருமணம் செய்து கொண்டார் . ஆயினும் குடும்ப வாழ்வில் அன்னாருக்குப் பற்று மிகவும் குறைவாகவே இருந்தது. ஓர் பற்றற்ற குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டு இருந்தார். சில ஆண்டு கால இல்வாழ்வுக்குப் பின்னர் ஸ்ரீ நீலகண்ட சிவம் அவர்கள் தமது இல்லம் விட்டு வெளியேறி பத்மநாபபுர கோவிலில் வீற்றிருக்கும் இறைவன் நீலகண்டேஸ்வரர் மற்றும் ஆனந்தவல்லி அம்மையின் அருள்கடாச்சத்தை வேண்டி அக்கோவிலுக்குள்ளே இருந்த வாகனப்பிறை அறையின்னுள் தன்னைத் தாளிட்டுக் கொண்டு மூன்று நாட்கள் உணவும் நீரும் இன்றி கடும் தவம் புரிந்தார்.இறைவனும் இறைவியும் இவரது உண்மையான பக்தியைக் கண்டு மகிழ்ந்து நேரில் தரிசனம் தந்து பால் மற்றும் பழங்களை அளித்து அருளியதால் ஸ்ரீதாசர் பாடும் திறமைப் பெற்றுப் பாடல்கள் இயற்றத் தொடங்கினார். மேற்கூறிய நிகழ்ச்சி ஸ்ரீ நீலகண்ட சிவனின் உள்ளத்தில் பக்திக் கனலைப் பற்ற வைக்கும் தீப்பொறியாக அமைந்தது. இதன் விளைவாகத் தமது பக்தி பிரவாகத்தைப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தத் துவங்கினார். பொய் சாட்சி சொல்வதை அறவே வெறுத்த இவர் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத தத்துவ சத்திய ஞானி என்றும் மகாத்மா என்றும் மக்களிடையே புகழ் பெற்றார். ஸ்ரீ நீலகண்ட சிவன் ஒருமுறை திருவனந்தபுரம் அரசவையில் சைவ முனிவர்கள் பற்றி உபன்யாசம் செய்ய அழைக்கப்பட்டு இருந்தார். தமது பிரசங்கத்தின் போது "முடிசூடும் மன்னர் முடிவில் ஒரு பிடி சாம்பலே" என்று பகன்றார். ஸ்ரீ நீலகண்ட சிவம் மன்னரின் கோபத்திற்கு ஆளாகிவிட்டாரே இனி என்ன நிகழுமோ என்று அஞ்சினர். ஆனால் அதற்கு நேர்மாறாக அரசர் ஸ்ரீதாசரைப் பாராட்டி ஓர் வெள்ளி தட்டில் நாணயங்கள் நிறைந்த ஓர் பணமுடிப்பை பரிசாக வழங்கி கௌரவித்தார். அப்பரிசினைப் பெற்றுக் கொள்ள மறுத்த ஸ்ரீசிவன் "பணமே நீ ஒரு பிணமே உன்னால் என்ன குணமே"என்று பாடினார். ஸ்ரீ நீலகண்ட சிவன் தெய்விக மார்க்கத்தில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால் பல்வேறு சமயங்களில் அவருக்கு இன்னல் ஏற்பட்ட போதெல்லாம் இறைவனே முன் வந்து உதவிக் கரம் நீட்டிக் காத்ததுண்டு. பத்மநாபபுரக் கோவிலில் எண்ணெய்க்குப் பதிலாகத் தண்ணீரை விட்டு விளக்குகளை எரியச் செய்தது,கருங்குளம் எனும் ஊரில் திடீரென்று மழை கொட்டச் செய்தது,இறந்த குழந்தையை உயிர்ப் பித்தது முதலியன ஆகும்.

**இசைத் தொண்டு**

ஸ்ரீ நீலகண்ட சிவன் அவர்கள் அருட்கவி ஆவார். குழந்தைப் பருவம் முதலே இறை பக்தியில் ஈடுபட்டவர். பல தலங்களுக்குச் சென்று பல பாடல்களை அங்கங்குள்ள இறைவன் மீதும் இறைவி மீதும் பக்திப் பரவசத்தால் கீர்த்தனைகள் பல இயற்றியுள்ளார். பஜனைக்கும் பக்திக்கும் முக்கியத்துவம் கொடுத்த மகான் ஆவர். முத்துசுவாமி தீட்சதர் அமைத்த "பஞ்சலிங்க ஸ்தலக் க்ருதிகள்" போலவும் ஸ்ரீ தியாகராஜர் அமைத்த "பஞ்சரத்ன கீர்த்தனைகள்" போலவும் ஸ்ரீ சிவன் அவர்கள் "பஞ்சநடன கீர்த்தனைகள் " தமிழில் இயற்றியுள்ளார்[2]. இதில் தில்லை, மதுரை, திருநெல்லை, திருக்குற்றாலம் மற்றும் திருவாலங்காடு போன்ற தலங்களில் எழுந்தருளியுள்ள நடராஜப் பெருமானின் க்ருதிகள் இடம் பெற்றுள்ளன. மேலும் விருத்தங்கள், பதிகங்கள், கண்ணிகள், சிந்து,மெட்டுகள்,லாலி,ஊஞ்சல்,ராகமாலிகைகள் இயற்றி உள்ளார். 1904 ஆம் ஆண்டு தாசர் உடைய மகன் சுப்ரமணிய சிவன் வெளியிட்ட "திருநீலகண்டபோதம்" என்ற நூலில் சுமார் 2000க்கு மேல் பலராக உருப்படிகள் உள்ளன.

**சிவன் அவர்களால் கையாளப்பட்ட அபூர்வ ராகங்கள்**

ஸ்ரீ நீல கண்ட சிவன் அவர்களாள் கையாளப்பட்ட அபூர்வ ராகங்கள்.[3]

1.ராகம் : “ பியாக் “

எ-கா கீர்த்தனை : “ பணிந்தார் பிறவி “

2.ராகம் : “ நாக நந்தினி “

எ-கா கீர்த்தனை : “ ஈசனே நின் “

3.ராகம் : “ குறிஞ்சி “

எ-கா கீர்த்தனை : “ காமக்கண்ணி தனை “

4.ராகம் : “ மங்கள கைசிகி “

எ-கா கீர்த்தனை : “ ஜக எல்லாம் “

5.ராகம் : “ மாஞ்சி “

எ-கா கீரித்தனை : “ பண்கன்றனை வணங்கி “

6.ராகம் : “ நாக சுவ்ராளி “

எ-கா கீர்த்தனை : “ பண்டாசுரன் “

இதை தவிர “ நாயகி “ , “ பல ஹம்ச “ , “ சுரடி “ , “ கோபிகா வசந்தம் “ , “ நவரஸ் “ போன்ற அபூர்வ ராகங்களைக் கையாண்டுள்ளார்.

**இசைக் கூறுகள்:**

**பொருள் நயம்**

பாடலின் பொருளை சொல்வது பொருள் நயம் ஆகும்.நீல கண்ட சிவனின் கீர்த்தனைகளின் பொருள் நயங்களைக் காண்போம்.

**இராகம்: பூர்வி கல்யாணி தாளம்: ரூபகம்**

**பல்லவி**

**ஆனந்த நடமாடுவார் தில்லையைம்பலந்ததனி**

**லடி பணி பவரிக்கப ஐய மில்லை**

**அனுபல்லவி**

**தானந்த மில்லாத ரூபன் தச்சந்தக சந்தக தகசனு**

**தளாங்கு தகததிங் கிணதோம் தளாங்கு தகததிங்கிணதோம்**

**தளாங்கு தகததிங்கிணதோம் தகதிமி ததிங்கினதோமென்-றானந்த நட**[4]

தில்லை அம்பலம் தன்னில் ஆனந்த நடனம் ஆடக் கூடிய நடராசப் பெருமானை அடிபணிபவருக்கு பயம் இல்லை தனக்கென உருவமில்லாதவன் ததீங்கினதோம் என ஆடக்கூடிய பெருமானை வஞ்சகம் இல்லாத அடியார்கள் குதிக்க, தேவர்களும் முனிவர்களும் துதிக்கவும் உமையாள் மதிக்கவும் முயலகன் மீது ஒரு காலை வைத்து பக்தர்கள் தொழ மற்றொரு காலைத் தூக்கி ஆக்கி அளிப்போரை மேளக் காரராக்கி நடராஜ பெருமான் சிதம்பரத்தில் இடுப்பிலே இடையில் உள்ள மணி சலசல எனவும் தலையில் அணிந்துள்ள சந்திரன் பளீர் என ஒளி வீசவும்,காலில் சிலம்பு கலீர் என ஒளி எழுப்பவும், கழுத்தில் நீலகண்டம் மின்ன ஹரஹர சிவசிவ என அண்டமும் பிண்டமும் ஆடிட,எட்டு திசையும் புகழ் பாடிட தக்கிட தரிகிட என ஆனந்த நடனமாடும் அழகை இக்கீர்த்தனத்தில் அமைந்துள்ளார்.

**இராகம்: மத்யமாவதி தாளம்: ரூபகம்**

**பல்லவி**

**கருணாகர கருணாகர கருணாகர குகனே**

**அனு பல்லவி**

**சரணாகதி சரணாகதி தருவாயறு முகனே**

**சரணங்கள்**

**1.கமலாலயன் முதலோர் தொழும் விமலாம் புய பாதா**

**காவா யிது சமயம் வானின் தேவர் சேனை நாதா**

**சம ராடிய பல தானவர் தமை வென்ற வேற் கையா**

**ஜக மெங் கணும் புகழ் பொங்கிய திகழன்பர்கள் மெய்யா[5]**

கருணை பொருந்திய முருகனே சரணாகதி தருவாய் அறுமுகனே.பிரம்மன் முதலானோர் தொழும் சிவபெருமனின் புதல்வனே தேவர்கள் சேனைக்குத் தலைவனே , காப்பதற்கு இதுவே சமயம்.உன்னொடு போர் புரிந்த பல வீரர்களை வென்ற வேலை கையில் கொண்ட வேலனே. உலகம் முழுவதும் உள்ள அன்பர்களுக்கு மெய்யனே. கைலாசம் முதலிய சைலேந்திர நிலையனே, உமையொடு கூடிய சங்கரருக்கு உரிய புதல்வனே.திரு நீல சுந்தரருக்கு அருளியவனே.வள்ளி தேவயானை யோடு இருக்கின்ற முருகனே.

**இராகம்: நாட்டை குறுஞ்சி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**விநாயகாதுணைசெய்தருள்சித்தி**

**விநாயகாதுணைசெய்[6]**

இக்கீர்த்தனையில், தாஸன் அவர்கள் தன் பெயரான " நீல கண்ட தாசன் என்ற முத்திரை வைத்துள்ளார்.அவருடைய கீர்த்தனங்களில் " திரு நீல சுந்தரர் " , " திரு நீல கண்டா " , " மைமணி சுந்தரன் " , " நீல கண்டம் " , " நீல மணி கண்டன் " ஆகிய முத்திரைகள் வந்துள்ளன.

**முடிவுரை**

சென்ற நூற்றண்டில் திருவனந்தபுரத்தில் வாழ்ந்திருந்து ஆயிரக்கான தமிழ்ப் பாடல்களையும் மற்றும் பல இசை வடிவங்களையும் மழை எனப் பொழிந்து உலகிற்கு வழங்கிய நீலகண்ட சிவன் அவர்கள் தென்னிந்திய வாக்கேயகாரர்களுள் மிக உயர்ந்த பதவியை வகிப்பவர். இறைவன் அருள் ஒன்றையே துணையாகக் கொண்டு மாந்தரை நல் வழி படுத்தும் ஒரே நோக்கத்தோடு தமது வாழ்நாள் முழுவதையும் பிரபந்தங்கள் புனைவதில் ஈடுபடித்திய மகான்சிவன் ஆவார். தமிழ் உள்ளளவும் தமிழிசை உள்ளளவும் ஸ்ரீ நீலகண்ட சிவன் அவர்கள் அருளிச் செய்த பாடல்கள் சாகா வரம் பெற்றுத் திகழும் என்பது உறுதி. அவரது படைப்புகள் என்றும் அழியாச் செல்வங்களாகத் திகழ்கின்றன.

**சான்றாதாரங்கள்**

1.ப்ரஹ்மஸ்ரீ நீலகண்ட சிவன் அவர்களின் கீர்த்தன மாலை (முதல் பாகம் ) கலாக்ஷேத்ர ப்ரசுர காரியாலயம் பதிப்பகம் சென்னை 1995 ப. 15

2.நீலகண்ட சிவன் கீர்த்தனைகள்,திருமதி. பி. எல். சரஸ்வதி ராம்,கௌரி குப்புசாமி, டாக்டர் எம். ஹரிஹரன், சிபிஹச் பப்ளிகேஷன்ஸ் திருவனந்தபுரம் 1995 ப. 33

*3.மஹாத்மா ஸ்ரீ நீலகண்ட சிவன் அவர்களின் கீர்த்தனைகள் (இரண்டாம் பாகம் ) திருமதி. பி. எல். சரஸ்வதி ராம், மௌலீஸ் அட்வர்டைசிங் சர்வீஸ் (பி ) லிட் பதிப்பகம் ,1995 சென்னை ப. 29*

*4.மஹாத்மா ஸ்ரீ நீலகண்ட சிவன் அவர்களின் கீர்த்தனைகள் (முதல் பாகம்) திருமதி. பி. எல். சரஸ்வதி ராம், மௌலீஸ் அட்வர்டைசிங் சர்வீஸ் (பி ) லிட் பதிப்பகம் ,சென்னை 1990 ப. 20*

*5. மஹாத்மா ஸ்ரீ நீலகண்ட சிவன் அவர்களின் கீர்த்தனைகள் (முதல் பாகம் ) திருமதி. பி. எல். சரஸ்வதி ராம், மௌலீஸ் அட்வர்டைசிங் சர்வீஸ் (பி ) லிட் பதிப்பகம்,சென்னை1990 ப.3*

*6.மஹாத்மா ஸ்ரீ நீலகண்ட சிவன் அவர்களின் கீர்த்தனைகள் (முதல் பாகம் ) திருமதி. பி. எல். சரஸ்வதி ராம், மௌலீஸ் அட்வர்டைசிங் சர்வீஸ் (பி ) லிட் பதிப்பகம் ,சென்னை 1990 ப.1*

***References:***

*1. Brahmashri Neelakanta Sivan's Kirtana Malai (Part 1), Kalakshetra Publication, Chennai 1995, p. 15*

*2. Neelakanta Sivan Kirtanas, Mrs. P. L. Saraswathi Ram, Gowri Kuppuswamy, Dr. M. Hariharan, CPH Publications, Thiruvananthapuram 1995, p. 33*

*3. Mahatma Sri Neelakanta Sivan's Kirtanas (Part 2), Mrs. P. L. Saraswathi Ram, Moulees Advertising Service (P) Ltd. Publishers, Chennai 1995, p. 29*

*4. Mahatma Sri Neelakanta Sivan's Kirtanas (Part 1), Mrs. P. L. Saraswathi Ram, Moulees Advertising Service (P) Ltd. Publishers, Chennai 1990, p. 20*

*5. Mahatma Sri Neelakanta Sivan's Kirtanas (Part 1), Mrs. P. L. Saraswathi Ram, Moulees Advertising Service (P) Ltd. Publishers, Chennai 1990, p. 3*

*6. Mahatma Sri Neelakanta Sivan's Kirtanas (Part 1), Mrs. P. L. Saraswathi Ram, Moulees Advertising Service (P) Ltd. Publishers, Chennai 1990, p. 1*

*Send feedback*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com